# பட்டினியற்ற நூற்றாண்டை நோக்கி !

By

A.N.Ahamed & S.Sivakumar, Dept. of Agric.Economics

உலகம் ஒவ்வொருவருக்கும் போதுமான உணவை உற்பத்தி செய்ய முடியும். ஏற்கனவே உலகின் மொத்த உற்பத்தி சராசரியான தனிமனிதத் தேவையை நிவர்த்தி செய்யப்போதுமானதாகவே உள்ளது. ஆனால் திட்டமிடப்படாத வகையில் இவை வீணடிக்கப் படுவதால் பட்டினி தீர்வுகாண முடியாத ஒன்றாக உள்ளது. இதற்கு சகல மட்டத்திலும் நடவடிக்கை எடுப்பதன் மூலம் மட்டுமே தீர்வு காண முடியும். அடுத்த நூற்றாண்டின் முதல் தசாப்தத்தில் உலக உணவுப் பிரச்சனைக்கு தீர்வு காணப்பட வேண்டும் என 1996 இல் நடைபெற்ற உலக உணவு உச்சி மகாநாட்டில் முடிவெடுக்கப்பட்டது. இதன்படி 2015ம் ஆண்டு பட்டினிக்கு உள்ளாவோரின் எண்ணிக்கையை அரைவாசி ஆக்குவதாக தீர்க்கமான தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

பட்டினியை ஒழிப்பதற்கு உணவு உற்பத்தியை அதிகரிப்பது முக்கியமானது. ஆனால் இந்த அதிகரிப்பு எதிர்பார்க்கப்பட்ட அளவுக்கு போதுமானதாக இல்லை. அதே வேளை உணவு பாதுகாக்கப்படுவதும் வறியவர்கட்கு உணவு சென்றடைய வழி செய்யப்படுவதும் அவசியமானதாகும், ஆனால் உண்மையில் பட்டினி என்பது சக்தியுடன் மட்டும் அல்லது

அல்ல. இவற்றுடன் பல்வேறு போசணைக் குறைபாட்டு சுகாதார விளைவுகளும் இதனுள் அடங்கும். எனவே பட்டினியை அகற்றுதல் என்ற எண்ணக்கருவில் மேற்படி விடயங்களும் கருதப்படுதல் அவசியமாகும். இன்று உலக சனத்தொகை 6 பில்லியனை சற்று தாண்டி நிற்கிறது. இது 1960 இல் இருந்த உலக சனத்தொகையின் இரட்டிப்பு மடங்காகும். கணிசமான அளவில் உணவு உற்பத்தி அதிகரிக்கப்பட்டபோதிலும் குறைந்த காலப் பகுதியில் சனத்தொகை பாரிய அதிகரிப்பைக் கொண்டிருந்தமையால் பட்டினிக்குள்ளாவோரை குறித்த எல்லைக்கு மேல் குறைக்க முடியவில்லை. இதன் காரணமாக உணவு பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பதன் மூலமே பல நாடுகளில் இந்நிலைமையை சமாளிப்பது சாத்தியமாகும் என்பது வலியுறுத்தப்படுகிறது.

உலகில் சராசரியான நேரடியாகக் கிடைக்கும் உணவின் நாளொன்றுக்கு ஆள்வீத கிடைத்தகு தன்மை மூன்று தசாப்தங்களுள் 2720 கிலோகலோரிகளாக அதிகரித்துள்ளது. இவ்வாறு 25 ஆண்டுகளில் உணவு கிடைத்தலில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் நிகழ்ந்ததனால் நீண்ட கால போசணைக்

டைந்து வரும் நாடுகளில் அரைவாசியாக் கப்பட்டபோதிலும் இத்தகைய வளர்ச்சிகள் பல நாடுகளில் சீரானதாக இருக்கவில்லை. இதன் விளைவாக போசணைக் குறைபாடு இன்னமும் பரந்த அளவில் காணப்படுவதுடன் சனத்தொகை அதிகரிப்பு வீதத்தை மட்டும் குறைப்பது இப்பிரச்சனைக்கு போதுமான நிவாரணமாக இருக்காது என்பதையும் தெளி வாக்குகிறது. மக்கள் தொகையைக் குறைப் பதில் அடைந்த முன்னேற்றங்கள் மூன்றாம் மண்டல நாடுகளைப் பொறுத்த வரை மிகவும் மந்தமானதாகும். தெற்காசியாவில் ஏற்பட்ட குறைவுக்கு நேர்மாறாக உப சகாராவுக்குரிய ஆபிரிக்காவில் சனத்தொகையில் அதிகரிப்பு ஏற்பட்டது. இவ்வாறாக ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது குறைபோசணை குறைபாடு காரணமாக 800 மில்லியன் மக்கள் பாதிக் கப்பட்டுள்ளனர்.

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் உள் நாட்டு உற்பத்தி அதிகரிக்கப்படும் வேளை யில் பொதுவாக அவற்றின் நுகர்வில் பாரிய அதிகரிப்பு ஏற்படுகிறது. 1990 களின் நடுப் பகுதி வரையான மூன்று தசாப்தங்களாக அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் தானிய உற்பத்தி ஆண்டுக்கு 3 சதவீத அதிகரிப்பைக் காட்டியது. இதனால் அவர்க ளின் நுகர்வு 87 சதவீதத்திற்கு அதிகரித்தது. இருப்பினும் குறிப்பாக 1970 களில் கணிச மான எண்ணிக்கையான நாடுகள் தமது உணவுத்தேவையை அடைவதற்கு அதிக ரித்த அளவிலான உணவு இறக்குமதி யிலேயே தங்கியிருந்தன. அந்த தசாப்தத்தில் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் தானிய இறக்குமதியானது வருமான அதிக ரிப்பு காரணமாகவும் எண்ணெய் ஏற்றுமதி யால் அந்நிய செலாவணி கிடைத்தமையாலும் மும்மடங்கு அதிகரிப்பைக் காட்டியது. இந்த நிலைப்பாட்டுக்கு அண்மைக்கிழக்கு நாடுக ளும் தென்னாபிரிக்காவும் சிறந்த உதார ணங்களாகும். எப்படியாயினும், முழு அபிவி ருத்தியடையும் நாடுகளும் இத்தகைய நிலைப்பாட்டை உடையன அல்ல. உலகில் மிக முக்கியமான சனத்தொகை அடர்த்தி யுள்ள நாடுகளான சீனா, இந்தியா ஆகிய வற்றின் உணவு இறக்குமதி அண்மைக் காலங்களில் குறைவுபடும் வீதத்திற்கு சென் றுள்ளதை இங்கு குறிப்பிடலாம்.

உலக விவசாயத் துறையானது அண்மைக் காலங்களில் பாரிய பின்னடைவுகளைக் கொண்டதாக காணப்படுகிறது. 1990 களின் முதல் அரைவாசிக் காலத்தில் உலக விவசாய அபிவிருத்தி மிக மந்தமாகச் சென்றது. தானிய உற்பத்தி தேக்க நிலையை அடைந்ததுடன் உற்பத்தி தளம்பலானது ஆள்வீத உற்பத்தியில் குறைவு ஏற்பட வழி கோலியது. 1980 களின் நடுப்பகுதியில் உச்ச ஆள்வீத உற்பத்தி 342 கிலோகிராமாகக் காணப்பட்டது. இருந்தபோதிலும் பின்னர் 1993-1995 வரையான மூன்று ஆண்டு சராசரி 311 கிலோகிராமாகக் குறைந்தது, ஆனால் 1996-1998 வரையான மூன்று ஆண்டு சராசரி உற்பத்தி 323 கிலோகிராமாகும்.

இயற்கை வளங்கள் குறைவடைந்து செல்வது, அண்மைக்கால அரசியல் கொள்கைகள் கைத்தொழில்துறை சாரந்து நிற்றல், குறுகிய கால நோக்கில் பொருத்தமற்றதான காலநிலை மாற்றம் என்பவற்றை இதற்கு காரணங்களாகக் காட்டலாம். மொத்தத்தில் உலக நாடுகளில் விவசாய உற்பத்தியின் போக்கு காலத்தோடு குறைந்து கொண்டு செல்வதையே இது காட்டுகிறது




Life is mostly forth and bubble,
Two things stand like stones,
Kindness in another's trouble,
Courage in our own.
(DELIC , Literary Forum, 1995 )

**உலக உற்பத்தியும் உள்நாட்டு உணவு பாதுகாப்பின்மையும்**

உலக உணவு உற்பத்தி குறைவுபட்டிருப்பதை விட உணவுப்பாதுகாப்பின்மையே பல நாடுகளில் உணவுப் பிரச்சனை காணப்படுவதற்கு பிரதான காரணமாகும். உலக சந்தையில் உணவு விலை வீழ்ச்சி விவசாய உற்பத்தியின் வளர்ச்சிப்போக்கைக் காட்டுகின்றது, இருப்பினும் உலக உணவு உற்பத்தியின் கொள்ளளவு அவசியப்படுகின்ற தன்னிறைவு நிலையிருந்து பாரதூரமாக குறைவாக இருப்பதாகவும் காட்டப்படுகின்றது, ஆனால் உள்நாட்டு உற்பத்தி இதிலிருந்து வேறுபாடுடையது இது ஏனெனில் , இங்கு உணவு பாதுகாப்பின்மையின் நேரடி விளைவு வறுமையாகும். பல நாடுகளில் வறுமையை அகற்றுவதிலும் தொழிற்றுறைக்கும் வருமானத்திற்குமான பிரதான துறையாக விவசாயத் துறையை மேம்படுத்துவதிலும் கவனம் செலுத்தப்படுகின்றது. இங்கு முழுமையான பொருளாதார அபிவிருத்தியையும் வறுமை அகற்றுதலையும் கருதும்போது விவசாய அபிவிருத்தியும் கிராமப் பொருளாதாரமும் தவிர்க்க முடியாத படிநிலை ஆகும்.

பரவலான கருத்துக்களின்படி உணவுப்பாதுகாப்பின்மையும், மந்தபோசணையும் உற்பத்திக் குறைபாட்டினால் ஆன ஒரு பிரச்சனை அல்ல. அதற்கு மேலாக உணவு விநியோகிக்கப்படுவதில் உள்ள சீரின்மையே இதற்கு காரணமாகும். முழு உலக உற்பத்தியையும் கருதினால் இது புலப்படுவது சாத்தியமாகும். சிலவேளைகளில் ஒரு நாட்டுக்குள்ளேயே சீரற்ற விநியோகம் காணப்படுகின்றது. அண்மைய உதாரணமாக இலங்கையில் பல்வேறு இடங்களில் திராட்சை கிலோகிராம் 300-400 ரூபாவாக விற்கப்படும் வேளையில் யாழ்ப்பாணத்தில் கிலோகிராம் 10 ரூபாவுக்கு கூட விற்க முடியாத நிலையிலும், சேமிப்பு முறைகள் இல்லாமையாலும் வீணே கொட்டப்படுகிறது. இதற்கு இங்குள்ள இராணுவ, அரசியல் தடைகள் காரணமாகும். சில இடங்களில் தேவையை விட மிகையளவு போசணை உணவு உள்ளெடுக்கப்படுகின்றது. மிகைப்போசணை (அபரிமிதமான உணவு உட்கொள்ளப்படுதல்), தேவையை விட மிஞ்சிய உற்பத்தி வீணாக்கப்படுதல் என்பன தவிர்க்கப்பட்டு மற்றைய இடங்களுக்கு விநியோகிக்கப்படுதல் மந்த போசணையையும் உணவு பாதுகாப்பின்மையையும் தவிர்க்க உதவும். ஆனால் இவையெல்லாம் எந்த அளவுக்கு நடைமுறைச் சாத்தியம் என்பது கேள்விக்குறியே !

## எதிர்கால நோக்கு

**1. சனத்தொகை**

உலக சனத்தொகை வளர்ச்சி வீதமானது குறைவடைந்து செல்கிறது. கருவள வீதம் சில ஆண்டுகளுக்கு முன் எதிர்பார்க்கப்பட்ட முன்னெறிகைக் கணக்கீடுகளை விட அண்மைய கணக்கீடுகள் குறைவாகவே இருக்கிறது. 1992 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சனத்தொகை மதிப்பீடு 2025 இல் 8.5 பில்லியனாகவும் 2050 இல் 9.8 பில்லியனாகவும்

இருக்கும் என கூறப்பட்டது. இதே ஐக்கிய நாடுகள் சனத்தொகை மதிப்பீடு 1998 இல் வெளியிட்ட மதிப்பீடுகளின்படி 2025 இல் 7.8 பில்லியனும் 2050 இல் 8.9 பில்லியனும் முன்னெறிகை செய்யப்பட்டுள்ளது. இதன்படி அடுத்த அரை நூற்றாண்டில் சனத்தொகை வளர்ச்சி வீதம் குறைவுபடுவது தெளிவாகிறது. உணவு உற்பத்தி வீதமானது குறைவுபட்டதாகக் காணப்படுகின்றமையால் சனத்தொகை வளர்ச்சி வீதத்தையும் குறைந்த நிலையில் பேணிக்கொள்வதே உணவு வழங்கல், கேள்வி என்பவற்றுக்கிடையிலான சமநிலையைப் பேணுவதில் துணை புரியும். ஆனாலும் தற்போதைய சனத்தொகையான 6 பில்லியன் சனத்தொகை என்பது கூட பூகோளத்திற்கு பாரிய சமூக பொருளாதார சுற்றாடல் சுமையே! ஒவ்வொரு ஆண்டும் குறைந்து 80 மில்லியன் மக்கள் சனத்தொகையில் அதிகரிக்கின்றனர். இதில் 90 சதவீதத்திற்கும் அதிகமானோர் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிலேயே வாழ்கின்றனர். ஆண்டு தோறும் அதிகரிக்கும் மக்கள் தொகையில் சுமார் 70 மில்லியன் பேர் வரை 20 அல்லது 25 வயது வரை மற்றவர்களில் தங்கி வாழ்பவர்களாகவும் உள்ளனர். தங்கி வாழும் வயதெல்லையைக் குறைப்பதும் உலக உணவு உற்பத்தியை ஆண்டு தோறும் ஒரு திட்டமான அளவினாலாவது அதிகரிப்பதும் இங்கு அவசியமாகும்.

## 2. பொருளாதார அபிவிருத்தி

பொருளாதார அபிவிருத்தி ஏற்படுத்தப்படுமாயின் அடுத்த நூற்றாண்டில் வறுமையை அகற்றுவது சாத்தியமாகும். உலக வங்கி 1998 இல், அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் மேற்கொண்ட மதிப்பீடுகளின்படி பொருளாதார அபிவிருத்தி கடந்த காலங்களை விட குறைந்த வீதத்தில் நடைபெற்றுச் செல்வது அறியப்பட்டுள்ளது. சீனா உட்பட கிழக்காசிய நாடுகளில் 1998-2007 வரையான பத்தாண்டு காலத்தில் பொருளாதார வளர்ச்சி ஆண்டுக்கு 2.9 வீதமாக இருக்கும் என கணிக்கப்பட்டுள்ள அதே வேளை இது 1988-1997 வரையான பத்தாண்டுகளில் ஆண்டுக்கு 7.2 வீதமாகக் காணப்பட்டது. ஆனால் தென்னாசியாவில் வளர்ச்சி வீதம் ஏறக் குறைய ஆண்டுக்கு 5.4 வீத மட்டத்தில் பேணப்படுகிறது. கிழக்காசியாவை விட தென்னாசியாவில் வறுமை ஒழிப்பு சாத்தியப்படுவதை இந்த குறியீடுகள் காட்டுகின்றன. இதற்கு முரணாக உபசகாராவுக்குரிய ஆபிரிக்காவில் ஆண்டுப் பொருளாதார வளர்ச்சி வீதம் ஒரு சதவீதத்தை மீறாததாகவே உள்ளது குறிப்பிடத்தக்கது.

சனத்தொகை வளர்ச்சி பற்றியும் பொருளாதார வளர்ச்சியின் பரம்பல் குறித்தும் கருதும்போது உணவுற்பத்தியை அதிகரிப்பதும், உணவுப் பாதுகாப்பு நடவடிக்கைகளும் போசணைக் குறைபாடுகளை களைவதற்கான மிக முக்கிய நடவடிக்கைகளாகக் காணப்படுகின்றன. ஆயினும் இந்த உற்பத்தி ரீதியிலான அதிகரிப்பு தேவைகளை விட குறைவாக இருப்பதும் சமபங்கீடின்றிக் காணப்படுவதும் மிக

முக்கிய பிரச்சனைகளாகும். குறைந்த பொருளாதார விருத்தியும் அதிக சனத்தொகை அதிகரிப்பும் குறைபோசணை நிலைமையும் வறுமையுள்ள நாடுகளில் காணப்படுகிறது. குறைந்த சனத்தொகையை உடைய செல்வவள நாடுகளில் பொருளாதார அதிகரிப்பு அதிகரிப்பு வீதத்தில் நிகழ்கிறது.

ஆயினும் கூட 2010 ஆம் ஆண்டுக்கான முன்னெறிகைகள் குறைபோசணை மட்டம் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் குறைவுபடுவதைக் காட்டுகின்றன. ஆனால் இந்தக் குறைவுபடும் அளவு 680 மில்லியன் மக்கள் என்ற எல்லைப்படுத்தப்பட்ட அளவாகும். இந்த விளைவுகள் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் உள்நாட்டு உற்பத்தி அதிகரிக்கப்பட்டதன் காரணமாக ஏற்பட்டனவாகும். இருப்பினும் இந்த நாடுகளில் நிகர உணவு இறக்குமதி உலகின் ஏனைய நாடுகளை விட உயர்வாகும். அண்மைக் காலங்களில் ஆண்டுக்கு 100-110 மில்லியன் தொன் தானியத்தை அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் இறக்குமதி செய்தன. இது 2010ம் ஆண்டளவில் 160 மில்லியன் தொன்னாக உயருமென மதிப்பிடப்பட்டுள்ளது.

### . விவசாய உற்பத்தியை அதிகரித்தல்

திர்காலத்தில் விவசாய உற்பத்தியை லும் அதிகரிக்க ஏற்புடைய வகையிலான ம் மற்றும் தொழில்நுட்ப உத்திகள் ளம்பாலும் பண்டைய முறைகள் ஊடானதாகவே இருக்கும். நில விஸ்தீரணத்தை அதிகரிப்பதனாலான உற்பத்தி அதிகரிப்பு மொத்தத்தில் ஒரு சிறு பங்கு மட்டுமே ஆகும். எனவே நிலைத்த உற்பத்தி அதிகரிப்பையும் உற்பத்தியின் தரத்தையும் உணவுப் பாதுகாப்பையும் மிகையான விவசாய இரசாயனங்களின் பயன்பாட்டைத் தவிர்த்து வேறு வகையில் அடைவதாயின் அதில் சிறந்த பொருத்தமான வழிவகைகளான [illegible] ஒருங்கிணைந்த பீடை முகாமைத்துவமும் உயிரியல் தொழில்நுட்பமும், சேதன பண்ணை முறைகளும் அதிகரித்த பங்கினை வகிக்கும். இம்முறையில் விளைச்சல் அதிகரிப்பு பொதுவாக பசுமைப்புரட்சி தொழில்நுட்பத்தை விட ஒப்பீட்டு ரீதியில் குறைவாகும். இருந்தபோதிலும் சுற்றாடல் பாதுகாப்பு, நிலைபேறான வளப்பயன்படுத்துகை என்பவற்றைக் கருதும்போது இம்முறைகளே சாத்தியப்பாடனவைகளாகும்.

உற்பத்தியை அதிகரிப்பதற்கு பயிர்ச்செய்கை நிலத்தை அதிகரிப்பதும் கருதப்படக் கூடிய ஒரு முறை ஆகும். ஆபிரிக்கா, லத்தீன் அமெரிக்கா மற்றும் தென்கிழக்காசியா முதலான நாடுகளில் பயிர்ச் செய்கைக்கு உள்ளாகாத பெருமளவு நிலம் மீந்திருக்கிறது. நிலம் பற்றிப் பேசும்போது உலக உணவு எதிர்காலமும் நிலைப்பேறும் குறித்து விவாதிக்கப்படுகின்ற விடயம் பயிர்ச் செய்கைக்கு உட்படுத்தப்படாமல் காணப்படுகின்ற நிலத்தை உபயோகித்து உணவுப் பிரச்சனைக்கு தீர்வு காண முடியுமே என்பதாகும்

இதற்கு உடனடியான விடை ஆம் என்று இருந்தாலும் பூமிக்கிரகம் எங்கணும் நிலமும் அதன்பரம்பலும் சீரானதாக இல்லை.

சில இடங்களில் வளமற்ற மண் காணப்படுகின்றது. மண் நச்சுத்தன்மை நோய்த் தாக்கம் உள்ளக கட்டமைப்பு கிடைக்காமை என்பன காரணமாக இந்நிலங்களை உணவு உற்பத்திக்குப் பயன்படுத்த முடியாதுள்ளது. இது தவிர நிலவளம் உணவு உற்பத்திக்கு மட்டுமன்றி வேறுபல தேவைகளுக்கும் உபயோகப்படுத்தப்படுகின்றது. இதனால் உணவு உற்பத்தியை விட வேறு தேவைகளுக்கான நிலத்தின் அமையச் செலவு அதிகமாக இருக்கும்போது உணவுற்பத்திக்கு நிலம் பயன்படுத்தப்படுவதும் சாத்தியமற்றுப் போவதுண்டு.

**சகல மக்களும் தரமான பாதுகாப்பான மற்றும் போசணையான உணவை கிடைக்கச் செய்வது எவ்வாறு ?**

சகல மக்களுக்கும் தரமான பாதுகாப்பான போசணைமிக்க உணவு கிடைக்க வேண்டும். உணவு விவசாய ஸ்தாபனம் (FAO) இது குறித்து பல முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இதில் வறுமையை ஒழிக்கும் பொருளாதார வளர்ச்சி ஏற்படுத்தப்படுவது முக்கியமானதாகும். இதற்கு பொருளாதார சமூக வளர்ச்சிக்குரிய கொள்கைகள் அதாவது ஏழைகளுக்கான வேலைவாய்ப்பு, வருமானம் ஈட்டும் வாய்ப்புக்கள் குறிப்பாக நிலம், கடன் என்பன கிடைக்கச் செய்தல் கல்வி, சுகாதார வசதிகள் கிடைக்கச் செய்தல் என்பன ஏற்படுத்தப்பட வேண்டும். வறுமையை நீக்கும் பொருளாதார அபிவிருத்தியை அடைவதற்கு சனத்தொகை அதிகமாகவுள்ள நாடுகளில் உணவுப் பாதுகாப்பு ஏற்படுத்தப்பட வேண்டும். வறுமையை ஒழிக்கும் பொருளாதார வளர்ச்சி அடையப்படாமைக்கு விவசாயத் துறை புறக்கணிக்கப்பட்டமையே காரணம் என்பது வரலாற்று அனுபவமாகும். எனவே இத்தகைய தவறுகளை மீள்பரிசீலனை செய்து விவசாயத் துறையை ஊக்குவிப்பதும் கிராமிய அபிவிருத்தியை ஏற்படுத்துவதும் அவசியமாகும். கொள்கை ஆக்குனர்கள் நீண்ட கால உணவுப் பாதுகாப்பினை அமுல்படுத்தும் கொள்கைகளை ஆக்குவதன் மூலம் உணவுப்பாதுகாப்பின்மையால் பாதிக்கப்படும் மக்களை அடையாளம் கண்டு பிரச்சனைக்குத் தீர்வு காண முடியும். உணவு விவசாய ஸ்தாபனம் உலக உணவு உச்சி மகாநாட்டின் இரண்டாம் அமர்வின்போது ஏனைய 20 சர்வதேச நிறுவனங்களின் ஒத்துழைப்பையும் உணவு பாதுகாப்பின்மையும் பாதிப்பு தகவல்கள் மற்றும் அவற்றை ஒழுங்காக்கும் முறை பற்றிய செயற்பாடுகளையும் எடுத்துரைத்துள்ளது. உணவுப் பாதுகாப்பின்றிக் காணப்படும் மிக வறிய இடங்களில் வளமான நிலமும் நீரும் இருப்பது வியப்புக்குரியதாகும். கிராமிய விவசாயப் பொருளாதார சமூக அமைப்பும் நிலைப்பேற்று அபிவிருத்தியும் முதலீடும் கிடைக்காமையுமே இதற்கு முக்கிய காரணமாகும். இப்பகுதி

யில் முதலீடு செய்பவர்கள் மக்களுக்கு நிவாரணம் வழங்குவதை விட கல்வி, சுகாதாரம், சமூக நல அபிவிருத்தி என்பவற்றுடன் உள்ளூர் விவசாய நடவடிக்கைகளை மேம்படுத்ததுவதற்கும் புதிய தொழில்நுட்பங்களையும் தொழிற்துறைகளையும் ஏற்படுத்துவதற்கும் முதலீடுகள் செய்தல் வேண்டும்.

உணவு விவசாய ஸ்தாபனம் இந்த அணுகு முறையின் அடிப்படையிலேயே தொழில்நுட்ப உதவியும் ஆலோசனையும் வழங்கும் திட்டங்களை வகுத்து செயற்படுகிறது. உணவு பாதுகாப்பு செயற்பாடுகள் இதற்கு நல்ல உதாரணமாகும். இச்செயற் திட்டங்கள் 39 குறைவருமானமுள்ள உணவு பற்றாக்குறை நாடுகளில் தற்போது நடைமுறைப்படுத்தப்படுகின்றது.. இத்தகைய மேலும் 34 நாடுகளில் இத்திட்டங்களை அமுல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளன. இத்திட்டங்களின் முக்கிய நோக்கம் உணவு உற்பத்தியை அதிகரிக்கச் செய்வதும் சகலருக்கும் உணவு சென்றடைய வழி செய்வதும் ஆகும். பயிர்ச்செய்கையை மேம்படுத்தும் வகையிலான பல்வேறு செயற் திட்டங்களான நீர் முகாமைத்துவம் , சீரிய நிலவள பயன்படுத்துகை முறை, நிலைப் பேற்று பயிர்ப்பாதுகாப்புத் திட்டம் என்பவற்றுடன் நீரியல் அங்கி வளர்ப்பு, மீன்பிடி, விலங்கு உற்பத்தி என்பவற்றிலும் கருத்துச் செலுத்தப்படுகின்றது.

அடுத்ததாக விவசாயக் கொள்கைகள் சமூகப் பொருளாதார வரைப்படுத்தல்களை (constraints) தடுப்பதாக அமைதல் வேண்டும். அத்துடன் விவசாய உற்பத்தி, உற்பத்திக்கு பின்னான நடவடிக்கைகள், சந்தைப்படுத்தல், வாணிபம், சகலருக்கும் உணவு சென்றடையச் செய்தல் முதலான யாவும் சுற்றாடலுடன் ஒன்றுபடுவனவாக இருத்தல் வேண்டும்.

உணவு விவசாய ஸ்தாபனம் 2010 ம் ஆண்டில் 150 உலக நாடுகளில் விவசாய அபிவிருத் தியை நோக்கி தகுந்த கொள்கைத் திட்டங்க ளுடன் செயற்படுத்தும் இலக்கு குறித்து தீர்மானித்துள்ளது. இதனால் அபிவிருத்தி யடைந்து வரும் நாடுகளில் தொழில்நுட்ப பொருளாதாரக் கூட்டுறவு மேம்படுத்தப்படும். விவசாய உற்பத்தித் துறையில் நிபுணத்துவம் வாய்ந்தவர்களால் பரஸ்பரம் நாடுகளுக் கிடையே அறிவு பரம்பல் செய்யப்படும். இதற்கான செலவு கூட்டுறவு நாடுகளால் பங்கீடு செய்து வழங்கப்பட வேண்டும். சீர்திருத்தச் சட்டங்கள் விவசாய அபிவிருத்தியை ஏற்படுத்துவதாக அமைதல் வேண்டும். உணவுப் பாதுகாப்பு முயற்சிகளை முடக்குவதாக அமையக் கூடாது. அந்த வகையில் இந்த நாடுகளில் பன்முக வர்த்தக உடன்படிக்கைகளை தயாரிப்பதில் உணவு விவசாய ஸ்தாபனம் முக்கிய பங்காற்றி வருகின்றது.

**நிறைவுரை**

அடுத்த நூற்றாண்டின் ஆரம்ப தசாப்தங்களில் விவசாயத்துறை தொடர்ச்சியாக அதன் விளைவுகளைத் தந்தாலும் கடந்த காலங்க

ன் வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் குறை
கவே இருக்கும். முழு உலகையும்
ங்கே கருதினால் இங்குள்ள வளங்களும்
ாழில்நுட்ப முனைப்பும் உலகின் வளரும்
ணவுத்தேவையை நிறைவு செய்யப்போது
ளதாகவும் பட்டினியை முற்றாக அகற்றக்
யதாகவும் இருக்கிறது. ஆனால் வறிய
களை உணவு சென்றடையும் வழிவகை
ள நாம் கண்டாக வேண்டியுள்ளது. இது
னில் பொதுவாக விவசாயத் துறை
லீடுகள் எல்லாம் விவசாய ஆராய்ச்சி,
ப்பாதுகாப்பு, பயன் உறுதியுள்ள நீர்ப்
ன்படுத்துகை எனும் வகையிலேயே
வு செய்யப்படுகின்றன. நீண்ட எதிர்கால
ங்கில் தொடர் வளர்ச்சியைக் காட்டும்
த்தி. சம பங்கீடின்றி விநியோகிக்கப்ப
பெரும் பிரச்சனையே. ஆள்வீத
வு நுகர்வு மேலும் அதிகரிப்பு நிலையில்
லும்போதும் உலக சனத்தொகையின்

ஒரு பகுதியினர் போதுமான உணவு நுகர்வுக்கு கீழே நுகர்பவர்களாக இருப்பது தவிர்க்கப்பட வேண்டியதாகும்.

சகல மக்களையும் உணவு சென்றடைய உரிய வழிவகைகள் செய்யப்பட முடியா விட்டால் அடுத்த நூற்றாண்டிலும் பட்டினி தீர்க்கப்படாமல் தொடரும். 2015 ம் ஆண்டுக்கு முன்னர் குறைபோசணையை உலகில் இருந்து அகற்றும் உலக உணவு உச்சி மகாநாட்டின் நோக்கத்தில் அதனை அமுல் நடத்துவதற்காக தேசிய அரசாங்கங்களும் சர்வதேச சமூகமும் சமூக அமைப்புக்களும் கொள்கை வகுத்து செயலாற்ற வேண்டும்.


References:

1.Future 1/1998

2.Jacques Diouf, Current Science, Vol. 77, September 1999.


**The following different formulations will be available in next century**

1. Water based micro capsules.
2. Water soluble bags.
3. Pesticide gels in water soluble bags.
4. Temperature insensitive micro emulsions.
5. Suspension Emulsions (SE).
6. Pest tabs ( Tablet formulations ).
7. Microbial bio control agents.
8. Water dispersible granules.
9. Control release pesticides.

**Thanks - Daily News**